**இந்திய அரசு**
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை
சென்னை - 600006
தொலைபேசி : **044- 28271951**

**GOVERNMENT OF INDIA**
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
6, College Road
Chennai–600006
Phone: **044- 28271951**

| **நாள்: 30-01-2023** | **நேரம்:1250 மணி** |
|---|---|

## தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான தினசரி வானிலை அறிக்கை

**கடந்த 24 மணி நேரத்திற்கான வானிலை தொகுப்பு:**

**தமிழ்நாடு மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. புதுச்சேரி பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது.**

**கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (சென்டிமீட்டரில்):**

**சீர்காழி (மயிலாடுதுறை), செம்பனார்கோயில் (மயிலாடுதுறை), சிதம்பரம் AWS (கடலூர்) தலா 2, காரைக்கால், கொள்ளிடம் (மயிலாடுதுறை), மயிலாடுதுறை தலா 1.**

**வெப்பநிலை பற்றிய குறிப்பு :**

குறைந்தபட்ச வெப்பநிலை: **நாமக்கல்லில் 14.0 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.**

**24 மணி நேர வெப்பநிலை மாறுதல்: (குறைந்தபட்ச வெப்பநிலை)**

| | |
|---|---|
| **மிகவும் குறைந்துள்ளது**<br>( - 4.1° செல்சியஸ் அல்லது அதற்கு குறைவாக ) | --------------- |
| **கணிசமாக குறைந்துள்ளது**<br>(- 2.1° செல்சியஸ் முதல் - 4.0° செல்சியஸ் வரை) | --------------- |
| **கணிசமாக அதிகரித்துள்ளது**<br>( 2.1° செல்சியஸ் முதல் 4.0 ° செல்சியஸ் வரை) | **கோயம்புத்தூர், திருவள்ளூர், சேலம் மற்றும் மதுரை மாவட்டங்களில்** |
| **மிகவும் அதிகரித்துள்ளது**<br>(4.1° செல்சியஸ் அல்லது அதற்கும் அதிகம் ) | **வேலூர் மாவட்டத்தில்** |
| **பெரிய மாற்றமில்லை**<br>(-2.0° செல்சியஸ் முதல் 2.0° C வரை) | **மற்ற ஏனைய மாவட்டங்களில்** |

**இயல்பு நிலையிலிருந்து வெப்ப அளவின் வேறுபாடு: (குறைந்தபட்ச வெப்பநிலை)**

| | |
|---|---|
| **இயல்பை விட மிக மிக அதிகம்**<br>**( 5.1 ° செல்சியஸ் அல்லது அதற்கு அதிகம்)** | --------------- |
| **இயல்பை விட மிக அதிகம்**<br>( 3.1 ° செல்சியஸ் முதல் 5.0 ° செல்சியஸ் வரை) | **திருவள்ளூர், கடலூர் மற்றும் சென்னை மாவட்டங்களில்** |
| **இயல்பை விட அதிகம்**<br>(1.6° செல்சியஸ் முதல் 3.0° செல்சியஸ் வரை ) | **கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில்** |
| **இயல்பை விட குறைவு**<br>( - 1.6° செல்சியஸ் முதல் - 3.0° செல்சியஸ் வரை) | ---------------- |
| **இயல்பை விட மிக குறைவு**<br>( - 3.1 ° செல்சியஸ் முதல்- 5.0° செல்சியஸ் வரை) | ---------------- |
| **இயல்பை விட மிக மிக குறைவு**<br>**( - 5.1 ° செல்சியஸ் அல்லது அதற்கு கீழ்)** | ---------------- |
| **இயல்பு நிலை**<br>( -1.5° செல்சியஸ் முதல் 1.5 ° செல்சியஸ் வரை ) | **மற்ற ஏனைய மாவட்டங்களில்** |

அடுத்த 5 தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை:

நேற்று (29.01.2023) தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று (30.01.2023) காலை 0830 மணி அளவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இலங்கை -திரிகோணமலையில் இருந்து கிழக்கு-தென்கிழக்கே சுமார் 670 கிலோ மீட்டர் தொலைவிலும், காரைக்காலில் இருந்து கிழக்கு- தென்கிழக்கே சுமார் 880 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது. இது 31.01.2023 மாலை வரை மேற்கு-வடமேற்கு திசையிலும், அதன் பிறகு மேற்கு-தென்மேற்கு திசையில் நகர்ந்து 01.02.2023 அன்று காலை இலங்கை கடற்பகுதிகளை கடக்கக் கூடும்.

இதன் காரணமாக,

30.01.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான / மிதமான மழை பெய்யக்கூடும்.

31.01.2023: தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடிமின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும்.

01.02.2023: தென்தமிழக மாவட்டங்களில் அநேக இடங்களிலும், வடதமிழக மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும் இடிமின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

02.02.2023: தென்தமிழக மாவட்டங்களில் அநேக இடங்களிலும், வடதமிழக மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும் இடிமின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும்.

03.02.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான / மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30-31 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

30.01.2023: இலங்கை கடற்கரையை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

31.01.2023: இலங்கை மற்றும் தமிழக கடலோர பகுதிகள், தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

01.02.2023: இலங்கை மற்றும் தமிழக கடலோர பகுதிகள், தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**02.02.2023:** இலங்கை மற்றும் தமிழக கடலோர பகுதிகள், தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.


ஆழ் கடலில் உள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.


மேலும் விவரங்களுக்கு: mausam.imd.gov.in/chennai இணையதளத்தை காணவும்.

பா. செந்தாமரை கண்ணன்
இயக்குனர்
தென் மண்டல தலைவருக்காக
மண்டல வானிலை ஆய்வு மையம், சென்னை

**01.01.2023 முதல்  30.01.2023 வரை பெய்த  மழை அளவு**

| | பதிவான மழை (மி.மீ) | இயல் பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 1.7 | 16.0 | -89 |
| செங்கல்பட்டு | 1.8 | 14.0 | -87 |
| சென்னை | 1.9 | 22.8 | -92 |
| கோயம்புத்தூர் | 12.6 | 6.7 | 89 |
| கடலூர் | 5.1 | 24.7 | -79 |
| தர்மபுரி | 0.0 | 3.8 | -100 |
| திண்டுக்கல் | 4.3 | 11.2 | -62 |
| ஈரோடு | 0.0 | 3.4 | -100 |
| கள்ளக்குறிச்சி | 0.0 | 11.8 | -100 |
| காஞ்சிபுரம் | 0.5 | 11.6 | -96 |
| கன்னியாகுமரி | 6.5 | 14.8 | -56 |
| காரைக்கால் | 14.5 | 43.5 | -67 |
| கரூர் | 0.0 | 4.3 | -100 |
| கிருஷ்ணகிரி | 0.0 | 2.6 | -100 |
| மதுரை | 0.9 | 10.0 | -91 |
| மயிலாடுதுறை | 11.4 | 32.8 | -65 |
| நாகப்பட்டினம் | 23.8 | 41.9 | -43 |
| நாமக்கல் | 0.2 | 4.2 | -95 |
| நீலகிரி | 10.1 | 17.4 | -42 |
| பெரம்பலூர் | 0.0 | 9.3 | -100 |
| புதுச்சேரி | 0.4 | 18.2 | -98 |
| புதுக்கோட்டை | 0.6 | 9.7 | -94 |
| ராமநாதபுரம் | 6.7 | 27.3 | -75 |
| ராணிப்பேட்டை | 0.0 | 7.9 | -100 |
| சேலம் | 0.0 | 3.7 | -100 |
| சிவகங்கை | 0.7 | 12.6 | -94 |
| தென்காசி | 16.6 | 20.1 | -17 |
| தஞ்சாவூர் | 5.5 | 20.4 | -73 |
| தேனி | 3.2 | 12.0 | -73 |
| திருநெல்வேலி | 16.9 | 27.5 | -39 |
| திருப்பத்தூர் | 0.0 | 2.9 | -100 |
| திருப்பூர் | 0.0 | 3.6 | -100 |
| திருவள்ளூர் | 0.7 | 14.5 | -95 |
| திருவண்ணாமலை | 0.3 | 9.0 | -97 |
| திருவாரூர் | 2.9 | 28.5 | -90 |
| தூத்துக்குடி | 8.7 | 15.3 | -43 |
| திருச்சிராப்பள்ளி | 1.7 | 7.5 | -78 |
| வேலூர் | 0.0 | 6.5 | -100 |
| விழுப்புரம் | 0.1 | 10.7 | -99 |
| விருதுநகர் | 9.8 | 14.5 | -32 |
| **தமிழ்நாடு மற்றும் புதுவை** | 3.7 | 12.0 | -69 |



குளிர்கால பருவமழை - 2023 தமிழ்நாடு மற்றும் புதுவை
01.01.2023 முதல் 30.01.2023 வரை பெய்த மழை அளவு
பதிவான மழை : 3.7 (மி மீ) இயல்பு மழை : 12.0 (மி மீ)
இயல்பிலிருந்து வேறுபாடு : (-) 69 %
(மழை அளவு (மி மீ)
20.0
18.0
16.0
14.0
12.0
10.0
8.0
6.0
4.0
2.0
0.0
ஜனவரி 1
ஜனவரி 5
ஜனவரி 10
ஜனவரி 15
ஜனவரி 20
ஜனவரி 25
ஜனவரி 30
பெப்ரவரி 4
பெப்ரவரி 9
பெப்ரவரி 14
பெப்ரவரி 19
பெப்ரவரி 24
பெப்ரவரி 28
நாள்
மழை
இயல்பு மழை


30/01/2023 காலை 8.30 மணியுடன் முடிவடைந்த
24 மணி நேரத்தில் பதிவான மழையளவு [மி. மீ]
இந்திய வானிலைத் துறை
மண்டல வானிலை நிலையம், சென்னை
தேதி : 30/01/2023
நீலகிரி
ஈரோடு
சேலம்
நாமக்கல்
கோவை
திருப்பூர்
கரூர்
திண்டுக்கல்
தேனி
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
ராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
கள்ளக்குறிச்சி
விழுப்புரம்
சென்னை
0.5
3.2
4.8
16.0
10.0
3.0
19.0
8.6
5.0
13.6
0.8
2.2
7.2
2.0
5.2
5.4
மழையளவு [மி. மீ]
லேசான மழை (0.1 - 15.6)
மிதமான மழை (15.6 - 64.5)
கனமழை (64.5 - 115.6)
மிக கனமழை (115.6 - 204.5)
அதி கனமழை (>204.5)

# 30/01/2023 காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை ( °C) மற்றும் இயல்பிலிருந்து அதன் விலகல் (°C)

இந்திய வானிலைத் துறை
மண்டல வானிலை நிலையம், சென்னை

தேதி: 30/01/2023





அதிகபட்ச வெப்பநிலை : 34.6° C
இடம் : ஈரோடு

குறிப்பு: இயல்பிலிருந்து அதிகபட்ச வெப்ப நிலையின் விலகல் அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளது
வி.நி : விமான நிலையம்

# 30/01/2023 காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை ( °C) மற்றும்


இந்திய வானிலைத் துறை
மண்டல வானிலை நிலையம், சென்னை

தேதி : 30/01/2023




குறைந்தபட்ச வெப்பநிலை (சமவெளி பகுதிகளில்) : 14° C
இடம் : நாமக்கல்
குறைந்தபட்ச வெப்பநிலை (மலை பகுதிகளில்) : 6.4° C
இடம் : ஊட்டி

குறிப்பு: இயல்பிலிருந்து குறைந்தபட்ச வெப்ப நிலையின் விலகல் அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளது
வி.நி : விமான நிலையம்



கனமழை எச்சரிக்கை - 30.01.2023
நாள் -3: 01.02.2023
India Meteorological Department
Regional Met Centre, Chennai
திருவள்ளூர்
சென்னை
இராணிப்பேட்டை
வேலூர்
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
திருவண்ணாமலை
செங்கல்பட்டு
விழுப்புரம்
தர்மபுரி
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
ஈரோடு
நீலகிரி
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
மயிலாடுதுறை
கோயம்புத்தூர்
திருப்பூர்
கரூர்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால்
தஞ்சாவூர்
திருவாரூர்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
நாகப்பட்டினம்
தேனி
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
இராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
WARNINGS
NO WARNING (NO ACTION)
WATCH (BE UPDATED)
ALERT (BE PREPARED)
WARNING (TAKE ACTION)
RAINFALL
Heavy Rainfall (64.5 to 115.5) mm
Very Heavy Rainfall (115.6 to 204.4) mm
Extremely Heavy Rainfall > 204.4 mm
Leaflet

# வகைப்பாடு

| | |
|---|---|
| வட தமிழக மாவட்டங்கள் | சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் |
| தென் தமிழக மாவட்டங்கள் | ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், மதுரை |
| உள் தமிழக மாவட்டங்கள் | வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, கள்ளக்குறிச்சி |
| வடஉள் தமிழக மாவட்டங்கள் | வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர். |
| தென்உள் தமிழக மாவட்டங்கள் | சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி. |
| கடலோர தமிழக மாவட்டங்கள் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி. |
| வட கடலோர தமிழக மாவட்டங்கள் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை. |
| தென் கடலோர தமிழக மாவட்டங்கள் | ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| டெல்டா மாவட்டங்கள் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை |
| மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் | நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர் |

<u>மழைப்பொழிவின் பரவல்:</u>

| (விழுக்காடு) மழை பதிவான இடங்கள் | வகைப்பாடு |
|---|---|
| **76-100** | பெரும்பாலான |
| **51-75** | அநேக |
| **26-50** | ஒருசில |
| **1-25** | ஓரிரு |
| மழையில்லை | வறண்ட |

<u>மழைப்பொழிவின் தீவிரம்:</u> (செ.மீ.)

| | |
|---|---|
| **1 செ.மீ. வரை** | லேசான மழை |
| **2-6** | மிதமான மழை |
| **7-11** | கனமழை |
| **12-20** | மிக கனமழை |
| **≥ 21** | அதி கனமழை |